தமிழகத்தில் முதலீடு செய்ய வாருங்கள்

9 முன்னணி விமான நிறுவனங்களுக்கு எடப்பாடி பழனிசாமி அழைப்பு

ஊக்கச் சலுகைகளை வழங்குவோம்; தொழில் துவங்க சாதகமான சூழல் உள்ளது

சென்னை, ஜூன் 2–

தமிழகத்தில் தொழில் முதலீடு செய்ய வாருங்கள் என 9 முன்னணி விமான நிறுவனங்களுக்கு முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி தனித்தனியாக கடிதம் எழுதி அழைப்பு விடுத்துள்ளார்.

இதுகுறித்து தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்தி குறிப்பில் கூறப்பட்டிருப்பதாவது:–

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமி வெளிநாட்டு முதலீடுகளை தமிழ்நாட்டில் ஈர்ப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார். யாதும் ஊரே திட்டம், நாடுகளுக்கான சிறப்பு அமைவுகள், வெளிநாட்டு தூதுவர்களுடனான சந்திப்பு நிகழ்ச்சி என பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்பொழுது உலகளவில் வானூர்தி துறையில் தலைசிறந்த 9 முன்னணி நிறுவனங்களின் தலைவர்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்திட நேரிடையாக அழைப்பு விடுத்து தனிப்பட்ட முறையில் முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் உலகப் பொருளாதாரச் சூழலில் ஏற்படுத்தியுள்ள விளைவுகளால், சில நாடுகளில் உள்ள தொழில் நிறுவனங்கள் தங்கள் முதலீடுகளை இந்தியாவிற்கு இடம் பெயர்ந்திட முடிவெடுத்துள்ளன. அம்முதலீடுகளை ஈர்ப்பதற்காக தமிழ்நாடு முதலமைச்சர் ''முதலீடுகளை ஈர்ப்பதற்கான சிறப்பு பணிக் குழு'' (special Investment Promotion Task force) தலைமைச் செயலாளர் தலைமையில் அமைத்துள்ளார்.

அண்மையில் 15,128 கோடி ரூபாய் முதலீட்டிற்கான 17 புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் பல்வேறு வெளிநாட்டு நிறுவனங்களுடன் மேற்கொள்ளப்பட்டது. இது இந்த பேரிடர் காலத்திலும் பன்னாட்டு முதலீட்டாளர்கள் தங்கள் தொழில் முதலீடுகளை மேற்கொள்ள தலைசிறந்த இடமாக தமிழ்நாட்டை கருதுவதை எடுத்துக்காட்டுகிறது.

9 முன்னணி நிறுவனங்கள்

உலகெங்கும் உள்ள முதலீட்டாளர்களை தமிழ்நாட்டில் தொழில் துவங்க ஈர்ப்பதற்கு அரசு பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது. தற்பொழுது, யுனைடெட் டெக்னாலஜி நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் கிரிகோரி ஜே ஹேயஸ், ஜெனரல் எலக்ட்ரிக் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் லாரன்ஸ் கல்ப், போயிங் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் தவே கல்ஹவுன், லாக்ஹீட் மார்டின் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் மரிலின் ஹீவ்சன், சாப்ரான் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் பிலிப் பெட்டிட்கோலின், ரோல்ஸ் ராய்ஸ் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் வாரன் ஈஸ்ட், ஏர்பஸ் நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் கைலம் பவுரி, லியானார்டோ நிறுவனத்தின் முதன்மைச் செயல் அலுவலர் அலெசாண்ட்ரோ புரபியுமோ மற்றும் ஹனிவெல் நிறுவனத்தின் முதன்மை செயல் அலுவலர் டேரிபஸ் ஆடம்சைக் ஆகிய 9 முன்னணி வானூர்தி நிறுவனங்களின் தலைவர்களை தமிழ்நாட்டில் முதலீடு செய்திட நேரிடையாக அழைப்பு விடுத்து முதலமைச்சர் கடிதம் எழுதியுள்ளார்.

அக்கடிதத்தில், தமிழ்நாட்டில் புதிய முதலீடுகளை மேற்கொள்வதில் உள்ள பல்வேறு சாதகமான அம்சங்களையும் சிறப்பான தொழில் சூழலையும் குறிப்பிட்டு, புதிய தொழில் முதலீடுகளுக்கு தமிழ்நாடு அரசு சிறப்பான ஆதரவை நல்கும் என்றும் அவர்களின் தேவைகளுக்கேற்ப ஊக்கச் சலுகைகளை வழங்கிடும் என்றும் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு அரசு செய்தி குறிப்பில் கூறப்பட்டுள்ளது.

முதலமைச்சர் எடப்பாடி பழனிசாமியை முகாம் அலுவலகத்தில் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சர் உடுமலை கே.ராதாகிருஷ்ணன் சந்தித்து தனது மகள் திருமணத்திற்கு வருகை தந்து மணமக்களை வாழ்த்த வேண்டுமென்று கேட்டுக் கொண்டு திருமண விழாவிற்கான அழைப்பிதழை வழங்கினார்.

இடஒதுக்கீடு குறித்து உறுதி அளிக்காவிட்டால்

அண்ணா பல்கலைக்கழகத்துக்கு சிறப்பு அந்தஸ்து தேவையில்லை: அமைச்சர் கே.பி.அன்பழகன் உறுதி

சென்னை, ஜூன்.2

இடஒதுக்கீடு குறித்து உறுதி யளிக்காவிட்டால் அண்ணா பல்கலைக்கழகத்துக்கு மத்திய அரசு வழங்கிய சிறப்பு அந்தஸ்து தேவையில்லை என்று உயர்கல்வித்துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் தெரிவித்தார்.

சென்னை அண்ணா பல்கலைக்கழகத்துக்கு சமீபத்தில் மத்திய அரசு 'உயர்கல்வி சிறப்பு நிறுவனம்' என்ற அந்தஸ்தை வழங்கி சிறப்பித்தது. பல்கலைக்கழகம் தமிழக அரசின் கட்டுப்பாட்டில் இருப்பதால், அந்த அந்தஸ்துக்கு ஒப்புதல் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசு கேட்டு இருந்தது. ஆனால் சிறப்பு அந்தஸ்து வழங்கப்பட்டாலும், ஏற்கனவே நடைமுறையில் உள்ள இடஒதுக்கீட்டு (69 சதவீதம்+31 சதவீதம்) முறையை பின்பற்றுவோம் என்ற உத்தரவாதம் அளிக்க வேண்டும் என்று மத்திய அரசை தமிழக அரசு கேட்டு இருந்தது.

மத்திய அரசு அதில் எந்த பிரச்சினையும் இருக்காது என்று தெரிவித்தது. இருப்பினும் அதை எழுத்துப்பூர்வமாக தெரிவிக்க தமிழக அரசு கேட்டிருந்த நிலையில், அதுகுறித்து மத்திய அரசு எந்தவித பதிலும் அளிக்கவில்லை. இதற்கிடையில் சிறப்பு அந்தஸ்து பெற மாநில அரசு ஒப்புதல் வழங்குவதற்கு இறுதி கெடுவை மே மாதம் 31ந்தேதி நிர்ணயம் செய்து இருந்தது.

சிறப்பு அந்தஸ்து பெறுவதற்கு உள்ள பிரச்சினைகள், அதற்கான வழிமுறைகள் குறித்து ஆராய தமிழக அரசு சார்பில் 5 அமைச்சர்கள், 3 செயலாளர்கள் அடங்கிய தனிக்குழுவும் அமைக்கப்பட்டது. அந்தக்குழுவினரும் ஆய்வு செய்து ஆலோசனை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் மத்திய அரசு வழங்கி இருந்த இறுதிகெடு மே 31–ந்தேதியுடன் முடிவடைந்தது. இதையடுத்து தமிழக அரசின் அடுத்தக்கட்ட நிலைப்பாடு என்ன? என்பது குறித்து உயர்கல்வி துறை அமைச்சர் கே.பி. அன்பழகன் கூறியதாவது:– நாம் விருப்பப்பட்டால் தான் அந்த அந்தஸ்தை தரப்போகிறார்கள். நம்மை பொறுத்தவரையில் 69 சதவீதம் இடஒதுக்கீடு என்பது மாறக்கூடாது. நுழைவுத்தேர்வு இல்லாமல் கவுன்சிலிங் நடத்துவதை உறுதிசெய்ய வேண்டும். இதையெல்லாம் 2017 சிறப்பு அந்தஸ்து ஒழுங்குமுறைப்படி, உறுதிப்பட அவர்கள் தெரிவித்தால்தான் அந்த அந்தஸ்தை பெறுவோம். இல்லையென்றால் அது தேவையில்லை. நாம் கேட்டபடி வழங்கவில்லை என்றாலும், அவர்கள் அளிப்பதாக சொன்ன வசதிக்கு தேவையான நிதியை கொரோனா நிலைமை சீரானபிறகு, முதலமைச்சரிடம் கேட்டு வாங்கி பெற்றுக்கொள்ளலாம் என்றார்.

★ கட்டாயம் முககவசம் அணிய வேண்டும்; ★ சமூக இடைவெளியை கடைப்பிடிக்கவேண்டும் ★ வரும் காலத்தில் பாதிப்பு அதிகரிக்க வாய்ப்பு

தனியார் மருத்துவமனைகளில் கொரோனா பரிசோதனை கட்டணம் ரூ.3 ஆயிரமாக குறைப்பு

ஸ்டான்லி மருத்துவமனையில் ஆய்வு செய்த பின் அமைச்சர் விஜயபாஸ்கர் பேட்டி

சென்னை, ஜூன்.2

தனியார் மருத்துவமனைகளில் கொரோனா பரிசோதனை கட்டணம் ரூ.3 ஆயிரமாக குறைக்கப்பட்டு உள்ளதாக சுகாதாரத்துறை அமைச்சர் டாக்டர் சி.விஜயபாஸ்கர் தெரிவித்துள்ளார். வரும் காலத்தில் கொரோனா தொற்று அதிகரிக்க வாய்ப்பு உள்ளது என்று அவர் கூறினார்.

சென்னை அரசு ஸ்டான்லி மருத்துவ மனையில் கொரோனா வைரசால் பாதிக்கப்பட்டுள்ளவர்களுக்கு அளிக்கப்படும் சிகிச்சைகள் குறித்து அமைச்சர் சி.விஜயபாஸ்கர் நேற்று ஆய்வு நடத்தினார்.

அப்போது, சுகாதாரத் துறை செயலாளர் பீலா ராஜேஷ், வருவாய் நிர்வாக ஆணையரும் கொரோனா வைரஸ் நோய் தடுப்பு சிறப்பு அதிகாரியுமான ஜெ.ராதாகிருஷ்ணன் மற்றும் சென்னை மாநகராட்சி கமிஷனர் கோ.பிரகாஷ், மருத்துவமனை டீன் பாலாஜி ஆகியோர் உடன் இருந்தனர்.

பின்னர், செய்தியாளர்களிடம் அமைச்சர் கூறியதாவது:– தமிழகத்தில் அரசு சார்பில் 43 கொரோனா பரிசோதனை கூடங்களும், தனியார் மருத்துவமனைகள் சார்பில் 29 பரிசோதனை கூடங்களும் உள்ளன. அரசு பரிசோதனை கூடங்களில் கட்டணம் கிடையாது. தனியார் பரிசோதனை கூடங்களில் இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சில் நிர்ணயித்த கட்டணமான ரூ.4 ஆயிரத்து 500 வசூலிக்கப்பட்டு வருகிறது.

ரூ.3 ஆயிரம் கட்டணம்

கொரோனா பரிசோதனை கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று ஏழை மற்றும் நடுத்தர மக்களிடம் இருந்து கோரிக்கைகள் வந்தது. இதையடுத்து முதலமைச்சர் உத்தரவின்பேரில், தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் உடன் பேசினேன். அப்போது கொரோனா பரிசோதனை செய்வதற்கான கட்டணத்தை குறைக்க வேண்டும் என்று வலியுறுத்தினேன். தனியார் மருத்துவமனை நிர்வாகிகள் அதனை ஏற்றுக்கொண்டார்கள். எனவே தனியார் பரிசோதனை கூடங்களில் இனிரூ.3ஆயிரம்மட்டுமேகொரோனா பரிசோதனைக்காக வசூலிக்கப்படும். முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீட்டு திட்டத்தில் உள்ளவர்களுக்கு ரூ.2 ஆயிரத்து 500 கழித்துக்கொள்ளப்படும். அந்த தொகை அரசால் வழங்கப்பட்டுவிடும். இதற்கான அதிகாரப்பூர்வ அறிவிப்பு இன்னும் ஓரிரு நாட்களுக்குள் வெளியாகும்.

ஸ்டான்லியில் மேலும் 400 படுக்கை

ஸ்டான்லி மருத்துவமனையில் கொரோனா வைரஸ் சிகிச்சைக்காக 500 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. தற்போது மேலும் 400 படுக்கை வசதிகள் ஏற்படுத்தப்பட்டு வருகிறது. இந்த பணிகள் 2 நாட்களில் நிறைவடையும். கொரோனா வைரஸ் பரவலை கட்டுப்படுத்த அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டு வருகிறது. ஓய்வு பெற்ற டாக்டர்களும் தாங்களாகவே மீண்டும் பணிக்கு வந்துள்ளனர். சென்னையில் அரசு சார்பில் 10 இடங்களில் பரிசோதனைகள் செய்யப்படு கின்றன.

ஏற்கெனவே சென்னையில் வைரஸ் தொற்றின் பாதிப்பு அதிகமாக உள்ளது. இதற்கிடையில் தளர்வுகள் அளிக்கப்பட்டுள்ளதால் விமான சேவை தொடங்கப்பட்டுள்ளது. வெளிமாநிலங்களில் இருந்து ஏராளமானோர் தமிழகத்துக்கு வருகின்றனர். இதனால் வைரஸ் தொற்று பரவலை கட்டுப்படுத்துவது சவாலாக உள்ளது.

பொதுமக்கள் அனைவரும் முகக்கவசம் அணிய வேண்டும். சமூக இடைவெளியை கடைபிடிக்க வேண்டும். காய்ச்சல், இருமல், மூச்சுத் திணறல், சளி பிரச்சினை இருந்தால் பொது போக்குவரத்தை பயன்படுத்தக் கூடாது. தாங்களாகவே பரிசோதனைக்கு உட்படுத்திக் கொள்ள வேண்டும். யாரும் தாங்களாகவே மருந்து கடைகளுக்குச் சென்று மாத்திரை, மருந்துகளை வாங்கி உட்கொள்ளக் கூடாது.

கபசுரக் குடிநீர் கொரோனா வைரசை குணப்படுத்தும் மருந்து இல்லை. அது, உடலில் நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்கும். கட்டுப்படுத்தப்பட்ட பகுதிகளில் இதுவரை 5.20 லட்சம் கபசுரக் குடிநீர் பாக்கெட்டுகள் விநியோகிக்கப்பட்டுள்ளன. தொடர்ந்து விநியோகிக்கும் பணி நடைபெற்று வருகிறது.

பிளாஸ்மா சிகிச்சை

டாக்டர்கள், செவிலியர்கள் கவச உடை அணிந்து பாதுகாப்புடன் இருந்தாலும் வைரஸ் தொற்றால் பாதிக்கப்படு கின்றனர். ஆனாலும், சிகிச்சை மற்றும் தனிமைப்படுத்தலுக்கு பின்னர் மீண்டும் பணிக்கு வருகின்றனர். பிளாஸ்மா சிகிச்சை மூலம் 7 பேர் நலமுடன் உள்ளனர். வரும் காலத்தில் கொரோனா வைரஸ் தொற்று எண்ணிக்கை இன்னும் அதிகரிக்க வாய்ப்புள்ளது.

இவ்வாறு டாக்டர் விஜயபாஸ்கர் தெரிவித்தார்.

வழிபாட்டு தலங்கள் திறப்பு எப்போது?

மத தலைவர்களுடன் தலைமை செயலாளர் நாளை ஆலோசனை

சென்னை, ஜூன்.2–

மத தலைவர்களுடன் தலைமை செயலாளர் கே. சண்முகம் நாளை ஆலோசனை நடத்துகிறார்.

தமிழகத்தில் பல்வேறு மத அமைப்புகளுக்கு தலைமை செயலாளர் கே.சண்முகம் எழுதிய கடிதத்தில் கூறப்பட்டு இருப்பதாவது:

கொரோனா தொற்று நோய் பரவலை தடுப்பதற்காக புது ஊரடங்கு உத்தரவால் மூடப்பட்டு இருக்கும் சமய வழிபாட்டு தலங்களை 8ந்தேதியில் இருந்து திறக்கலாம் என்று மத்திய அரசு அறிவித்து உள்ளது.

இதன் அடிப்படையில் கொரோனா தொற்றின் நிலையை கருத்தில் கொண்டு தமிழ்நாட்டில் உள்ள சமய வழிபாட்டு தலங்களை எப்போது திறக்கலாம்என்பதுபற்றியும்,அவற்றை திறக்கும் போது கடைப்பிடிக்க வேண்டிய நடைமுறைகள் பற்றியும் கருத்துக்களை பெறுவதற்காக 3ந்தேதி (நாளை) மாலை 4.45 மணிக்கு சென்னை தலைமை செயலகத்தில் உள்ள பழைய கட்டிடத்தில் 2வது தளத்தில் உள்ள கூட்டரங்கில் மத தலைவர்களுடன் எனது தலைமையில் ஆலோசனை கூட்டம் நடைபெற உள்ளது.

இதில் நீங்கள் அனைவரும் பங்கேற்க வேண்டும். இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் மூத்த விஞ்ஞானிக்கு கொரோனா

மும்பை, ஜூன் 2–

மும்பையை சேர்ந்த இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் மூத்த விஞ்ஞானி ஒருவருக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதியாகி உள்ளது.

அந்த விஞ்ஞானி கடந்த வாரம் டெல்லியில் உள்ள இந்திய மருத்துவ ஆராய்ச்சி கவுன்சிலின் (ஐ.சி.எம்.ஆர்.) தலைமையகத்தில் நடந்த கூட்டத்தில் பங்கேற்றுள்ளார். இதனால் அந்த கட்டிடம் முழுவதும் கிருமி நாசினி தெளிக்கப்பட்டு சுத்தப்படுத்தப்பட்டுள்ளது. இதனால் கொரோனா தடுப்பு பணியில் இருப்பவர்கள் மட்டுமே தேவை என்றால் தலைமை அலுவலகத்துக்கு வர வேண்டும் என்றும் மற்றவர்கள் வீட்டில் இருந்தே பணியாற்ற வேண்டும் என்றும் கூறப்பட்டுள்ளது.

இந்த கூட்டத்தில் ஐ.சி.எம்.ஆர். இயக்குனர் ஜெனரல் டாக்டர் பல்ராம் பார்கவா உள்ளிட்ட அதிகாரிகள் கலந்து கொண்டனர். இதனால் கூட்டத்தில் கலந்து கொண்டவர்களும், விஞ்ஞானியுடன் தொடர்பில் இருந்தவர்களும் தங்களை தனிமைப்படுத்திக் கொள்ளவும், பரிசோதனை செய்து கொள்ளவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்
CIN: L36999TN1961PLC004606
பதிவு அலுவலகம்: ''எஸ்வின் ஹவுஸ்'', 13, பழைய மகாபலிபுரம் ரோடு, பெருங்குடி, சென்னை–600 096.
தொலைபேசி: 044–24960335/39279318/43063545 இமெயில்: hebcnn@highenergy.co.in
Investor Gievance ID : investor@highenerghyltd.com, Website : www.highenergy.co.in

அறிவிப்பு

கம்பெனிகள் சட்டம் 2013, பிரிவு 124 (6) விதிகள் மற்றும் அவ்வப்போது திருத்தப்பட்ட முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி ஆணையம் (கணக்கியல், தணிக்கை, பரிமாற்றம் மற்றும் திரும்ப அளித்தல்) விதிகள் 2016, விதி 6–ன்படி பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், தொடர்ச்சியாக கடந்த ஏழு ஆண்டுகளாக கோரப்படாத அல்லது செலுத்தப்படாத டிவிடெண்டை உடைய அனைத்து பங்குகளும் சிடிஎஸ்எல் உடன் பராமரிக்கப்படும் முதலீட்டாளர் கல்வி மற்றும் பாதுகாப்பு நிதி (''ஐஇபிஎப்'') ஆணையத்தின் டீமேட் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

யாருடைய பங்குகள் ஐஇபிஎப் டீமேட் கணக்கிற்கு மாற்றப்பட உள்ளது என்பது குறித்து இது சம்பந்தமான பங்குதாரர்களுக்கு தனித்தனியான அறிவிப்பு அவர்களின் சமீபத்திய முகவரிக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது. அந்த பங்குதாரர்களின் விவரங்கள் கம்பெனியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது.

ஆண்டுவாரியாக செலுத்தப்படாத மேற்கண்ட பங்குதாரர்களின் டிவிடெண்ட் விவரங்கள் கம்பெனியின் இணையதளத்தில் பதிவேற்றம் செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தப்பட்ட பங்குதாரர்கள் பெறப்படாத டிவிடெண்ட் குறித்த கோரிக்கைகளை 10 ஆகஸ்ட் 2020 அன்றோ அல்லது அதற்கு முன்னதாகவோ சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள், தவறும்பட்சத்தில் அவர்களின் பங்குகள் ஐஇபிஎப் டீமேட் கணக்கிற்கு மாற்றம் செய்யப்படும்.

கோரப்படாத டிவிடெண்ட் மற்றும் அந்த பங்குகள் மீது சேர்ந்துள்ள அனைத்து பலன்கள் உள்பட ஐஇபிஎப் ஆணையத்துக்கு மாற்றப்பட பங்குகள் ஆகியவற்றை விதிகளின் கீழ் பரிந்துரைக்கப்பட்ட நடைமுறைகளை பின்பற்றி ஐஇபிஎப் ஆணையத்திடமிருந்து அவற்றை திரும்ப கோரி பெறலாம் என்பதை பங்குதாரர்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். இந்த சம்பந்தமாக கம்பெனிக்கு எதிராக எந்த கோரிக்கையும் வைக்க இயலாது.

ஏதாவது தகவல்/சந்தேகம் இருப்பின் பங்குதாரர்கள் கம்பெனிகள் பதிவாளர் மற்றும் பங்கு மாற்று முகவர் M/S. கேமியோ கார்ப்பரேட் சர்வீசஸ் லிமிடெட், சுப்ரமணியன் பில்டிங், 5வது தளம், எண். 1 கிளப் ஹவுஸ் ரோடு, சென்னை–600 002. Phone: 04428460390, Email: investor@cameoindia.com, Website : www.cameoindia.com–ல் தொடர்பு கொள்ளலாம்.

ஹை எனர்ஜி பேட்டரீஸ் (இந்தியா) லிமிடெட்டுக்காக
S V ராஜு
கம்பெனி செயலாளர்

தேதி : 30.05.2020
இடம் : சென்னை

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்
தி ஓபராய் குழும உறுப்பினர்
பதிவு அலுவலகம்: 1/24, ஜி.எஸ்.டி ரோடு, மீனம்பாக்கம், சென்னை–600027.
CIN: L92490TN1983PLC009903
Website: www.eihassociatedhotels.in
Phone: 91-44-22344747, Fax: 91-44-22346699

அறிவிப்பு

செக்யூரிடீஸ் அண்ட் எக்சேஞ் போர்டு ஆப் இந்தியா (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 மார்ச், 2020ல் முடிந்த காலாண்டு/நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை பரிசீலித்து, ஒப்புதல் அளித்து, பதிவு செய்யவும் மற்றும் டிவிடெண்ட் ஏதேனும் இருப்பின் அதனை பரிந்துரைக்கவும் கம்பெனி இயக்குனர்கள் குழுவின் கூட்டம் திங்கட்கிழமை, 8 ஜூன் 2020 அன்று நடைபெறும் என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இந்த அறிவிப்பு கம்பெனியின் இணைய தளம் www.eihassociatedhotels.in மற்றும் ஸ்டாக் எச்சேஞ்சுகளின் இணைய தளங்கள் www.bseindia.com மற்றும் www.nseindia.comலும் உள்ளது.

EIH அசோசியேட்டட் ஹோட்டல்ஸ் லிமிடெட்டுக்காக
இந்த்ராணி ரே
கம்பெனி செயலாளர்

தேதி: 1 ஜூன் 2020

பெயர் மாற்றம்

Pranav Venkata Raman Ganapathi Subramanian, தந்தை பெயர்: Venkataraman Ganapath Subramanian, பிறந்த தேதி: 09.08.1992, F2, C– பிளாக், சிந்து ராயல் அபார்ட்மெண்ட்ஸ், ராஜீவ் நகர் 3வது தெரு, பெரிய கோவிலம்பாக்கம், S. கொளத்தூர், சென்னை – 600 129, என்ற முகவரியில் வசிக்கும் நான் இனி **PRANAV SUBRAMANIAN,** என்று அழைக்கப்படுகிறேன்.

Pranav Venkata Raman
Ganapathi Subramanian

ஈசாப் இந்தியா லிமிடெட் ESAB
CIN:L29299TN1987PLC058738
பதிவு அலுவலகம் : எண் 13, 3வது பிரதான சாலை, அம்பத்தூர் தொழிற்பேட்டை, சென்னை- 600 058.
தொ.பேசி எண். 044-4228 1100 | இ-மெயில்: investor.relations@esab.co.in

அறிவிப்பு

இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால் 28, மே 2020 வியாழக்கிழமை அன்று இயக்குனர் குழுக்கூட்டம் நடைபெற்றது. அதில் 2019–2020 நிதியாண்டிற்கான தலா ரூ. 10/– மதிப்புடைய சமவீத பங்கு (Equity Share) ஒன்றுக்கு இடைக்கால ஈவுத்தொகை (Interim Dividend) ரூ. 70/– (அதாவது 700%) அறிவிக்கப்பட்டது. இந்த இடைக்கால ஈவுத்தொகை பெறுவதற்கான தகுதியுடைய பங்குதாரர்களை தீர்மானிப்பதற்கு பதிவுத்தேதியாக (Record Date) வெள்ளிக்கிழமை, ஜூன் 12, 2020 என இயக்குனர் குழுவால் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இந்த இடைக்கால ஈவுத்தொகை தகுதியுடைய பங்குதாரர்களுக்கு செவ்வாய்க்கிழமை, ஜூன் 23, 2020 தேதிக்குள் விநியோகிக்கப்படும்.

இந்திய அரசின் உத்தேச திட்டங்களின் அடிப்படையில் 2020–2021 நிதியாண்டிலிருந்து ரூ. 5000/–க்கு மேல் செலுத்தப்படும் ஈவுத்தொகை, மூலத்தில் வரிப்பிடித்தம் செய்வதற்கு உட்பட்டது. மேலும் இதன் மூலம் அறிவிப்பது என்னவென்றால், வரிப்பிடித்தம் எதுவும் செய்யாதிருப்பதற்கு அல்லது குறைந்த வீதத்தில் வரிப்பிடித்தம் செய்வதற்கு உள்ள வாய்ப்புகளை பயன்படுத்த விரும்பும் பங்குதாரர்கள் தங்களது கோரிக்கைக்கு ஆதாரமாக உரிய ஆதாரங்களை அல்லது ஆவணங்களை சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுவதுடன், அவர்கள் தங்களது கோரிக்கைகளை திங்கள்கிழமை ஜூன் 15, 2020குள் மின்னஞ்சல் (srirams@integratedindia.in) மூலம் அனுப்பிவைக்க வேண்டும்.

வெளிநாடு வாழ் பங்குதாரர்களாக இருப்பின் வருமானவரிச்சட்டம் 1961, பிரிவு 195 ஷரத்துகளின்படி நடப்பிலுள்ள வீதங்களில் வரிகள் நிறுத்தி வைக்கப்படும். மேற்படி சட்டத்தின் சம்பந்தப்பட்ட ஷரத்துகளின்படி, அவர்களுக்கு வழங்கப்படும் மீது நிறுத்தி வைக்கப்படும் வரிவீதம் 20% (+பொருந்துகின்ற சர்சார்ஜ் & செஸ் வரி) என்றிருக்கும். எனினும், வருமானவரிச்சட்டம், பிரிவு 90–ன்படி, இந்தியாவிற்கும், தற்போது வெளிநாடுவாழ் பங்குதாரர்கள் வசிக்கும் நாட்டிற்கும் இடையிலான ரெட்டைவரி விதித்தல் தவிர்ப்பு ஒப்பந்த (DTAA) ஷரத்துகளில் காணும் விருப்ப அம்சங்கள் தங்களுக்கு பலனளிப்பதாக இருந்தால் பயன்படுத்திக்கொள்ளலாம். இந்த வரி ஒப்பந்த பலன்களை வெளிநாடுவாழ் பங்குதாரர்கள் பெற விரும்பினால் பின்வருபவளவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

1. வெளிநாடுவாழ் பங்குதாரர்கள் தற்போது வசித்து வரும் நாட்டின் வருமானவரி அதிகாரிகளிடமிருந்து பெற்ற வரிவிதிப்புச்சான்று (TRC) சுய கையொப்பமிட்ட பிரதி.
2. படிவம் எண் 10ல் சுய அறிவித்தல் – இப்படிவத்தில் குறிப்பிடவேண்டிய அனைத்து விவரங்களும் TRCல் குறிப்பிடவில்லையெனில்.
3. இந்திய வருமானவரித்துறை அளித்த நிரந்தர கணக்கு எண் (PAN அட்டை) சுய சான்றிட்ட பிரதி.
4. பின்வரும் அம்சங்கள் குறித்து சான்றளிக்கும் சுய அறிவித்தல்.
   - 2020–2021 நிதியாண்டில் தங்கள் வசித்து வரும் நாட்டில், பங்குதாரர் வரிவிதிக்கப்பட்டவராக இருக்கிறார் மற்றும் தொடர்ந்து இருப்பார்.
   - நிறுவனத்தால் அறிவிக்கப்பட்ட ஈவுத்தொகை மீது, வரி நிறுத்திவைப்பதற்கான DTAA அளிக்கும் வரிவீத பலன்களை பெற பங்குதாரர் தகுதியுடையவர்.
   - DTAA அளிக்கும் வரிவீத பலன்களை பெற எவ்விதத்திலும் தடைகள் இருப்பதற்கான காரணங்கள் உள்ளதாக பங்குதாரர் நினைக்கவில்லை.
   - நிறுவனம் அளித்துள்ள பங்குகளுக்கு, நிறுவனத்திலிருந்து பெறவுள்ள ஈவுத் தொகைக்கும் பங்குதாரரே முழு பலன் பெரும் உரிமையாளராவர்.
   - 2020–2021 நிதியாண்டில் இந்தியாவில் வரிவிதிக்கத்தக்க நிலையிலோ அல்லது நிரந்தர நிறுவனமோ எதுவும் பங்குதாரரிடம் இல்லை.

ஈவுத்தொகை மீது வரிப்பிடித்தம் அல்லது வரி நிறுத்திவைப்பு செய்யப்படும் நேரத்தில் DTAA அளிக்கும் வரிவீத பலன்களை பெற விண்ணப்பிக்க வேண்டிய பொறுப்பு நிறுவனத்திற்கு இல்லை.

வெளிநாடுவாழ் பங்குதாரர்கள் சமர்ப்பிக்கும் ஆவணங்கள், நிறுவனத்தின் பார்வையில் முழுமையாகவும் திருப்திகரமாகவும் இருப்பதை பொறுத்து DTAA அளிக்கும் வரிவீத பலன்களை பெறுவதற்கான விண்ணப்பங்கள் ஏற்கப்படும்.

உரிய TDS/ நிறுத்திவைக்கும் வரிவிகிதத்தை தீர்மானிக்க வசதியாக மேற்குறித்த ஆவணங்களையும் விவரங்களையும் முறையாக எங்களுக்கு ஜூன் 15, 2020குள் சமர்ப்பிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.

இது தொடர்பான அனைத்து விவரங்களும் நிறுவனத்தின் www.esabindia.com இணையத்தளத்தில் கிடைக்கின்றன.

இயக்குனர் குழுவின் சார்பாக
S. வெங்கடகிருஷ்ணன்
நிறுவன செயலாளர்

சென்னை
1 ஜுன். 2020

ramco
ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்
CIN: L72300TN1997PLC037550
பதிவு அலுவலகம்: 47, பிஎஸ்கே நகர், ராஜபாளையம்–626 108.
கார்ப்பரேட் அலுவலகம்: 64, சர்தார் பட்டேல் ரோடு, தரமணி, சென்னை–600 113.
Tel: +91 44 2235 4510 / 6653 4000, Fax: +91 44 2235 2884
E-mail:investorcomplaints@ramco.com, Website:www.ramco.com

அறிவிப்பு

செபி (பட்டியல் கட்டுப்பாடுகள் மற்றும் வெளியீடு தேவைகள்) விதிகள் 2015ன் விதி 29 மற்றும் 47ன்படி, இதர அலுவல்களுக்கு இடையே 31 மார்ச், 2020ல் முடிந்த காலாண்டு மற்றும் நிதி ஆண்டுக்கான தணிக்கை செய்யப்பட்ட நிதிநிலை முடிவுகளை (தனியானது மற்றும் ஒருங்கிணைந்தது) பரிசீலித்து ஒப்புதல் அளிக்க கம்பெனியின் இயக்குனர்கள் குழுவின் கூட்டம் வெள்ளிக்கிழமை, 19 ஜூன் 2020 அன்று சென்னையில் நடைபெறுகிறது என்று இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

கம்பெனியின் இணையதளம் www.ramco.com மற்றும் கம்பெனியின் பங்குகள் பட்டியலிடப்பட்ட ஸ்டாக் எக்சேஞ்சுகளின் இணையதளம் அதாவது பிஎஸ்இ லிமிடெட் –www.bseindia.com மற்றும் நேஷனல் ஸ்டாக் எக்சேஞ் ஆப் இந்தியா லிமிடெட்–www.nseindia.comலும் இந்த அறிவிப்பு உள்ளது.

ராம்கோ சிஸ்டம்ஸ் லிமிடெட்டுக்காக
ஒப்பம்/–
விஜய ராகவன் நே.ஈ.
கம்பெனி செயலாளர்

இடம் : சென்னை
தேதி : ஜூன் 1, 2020